Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

ஒளி - 01 - கதிர் - 310 02.03.2001 வெள்ளிக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/-

A.K.S.JEWELLERS

அழகிற் சிறந்த ௨௨ கரட் தங்க நகைகளை, பளிச்சிடும் வண்ண டிசைன்களில் உத்தரவாதத்துடன் பெற்றிட



A.K.S நகை மாளிகை

A.K.S நகை மாளிகை

பிரதான வீதி, களுவாஞ்சிகுடி

## இயக்கச்சியில் போர் விமானங்கள் குண்டு வீச்சு!

(யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் இயக்கச்சிப் பகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் விமானப் படையினர் தாக்குதல் நடத்தியதாக கொழும்பிலுள்ள விமானப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் இது குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித தகவல்களும் வெளியிடப்படவில்லை.

இத் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் நிலைகள் சேதமாக்கப்பட்டதாகவும், சில புலி உறுப்பினர்கள் பலியானதாகவும் மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் நேற்று அதிகாலை தென்மராட்சியிலுள்ள படையினரின் ஆட்லறித் தளங்களிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான பளை மற்றும் இயக்கச்சிப் பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக யாழ். தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் போர் நிறுத்தம் செய்துள்ள இவ்வேளையில் புலிகளின் நிலைகளைக் குறிவைத்து படையினர் தொடர்ச்சியான தாக்குதலை நடத்தி வருகின்றனர். ஆனால் புலிகள் எந்தவொரு தாக்குதலிலும் ஈடுபடாது தற்காப்பு தாக்குதலில் மட்டும் ஈடுபட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

# பிரிட்டிஷ் முடிவுக்கு காரணம் தமிழீழக் கோரிக்கையல்ல

## உள்துறை இணையமைச்சர் தகவல்

(நமது சிறப்பு நிருபர்)

**பிரித்தானியாவில் விடுலைப்புலிகள் தடை செய்யப்பட்டாலும் தமிழீழம் பற்றி பேசுவதற்கோ அல்லது பிரிவினை தொடர்பாக கருத்துக்களை தெரி விப்பதற்கோ தடைகள் இல்லை என பிரித்தானிய உள்துறை இணையமைச்சர் சார்ஸ்கிளாக் தெரிவித்துள்ளார்.**

பிரித்தானியாவில் தடை செய்யும் பட்டியல் வெளியாகும் முன்பு தமிழ் ஒளிபரப்புக் கூட்டுத்தாபன (T.B.C) செய்திப் பிரிவினருடன் இடம் பெற்ற சந்திப்பின் போது அவர் இது பற்றி தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் தமிழ் ஒளி பரப்பு கூட்டுத்தாபன செய்திப் பிரிவினர் கலந்து கொண்டனர்.

அங்கு பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே, தமிழீழம் கோரிப் போராடுவதற்காகவோ அல்லது இலங்கை அரசுக்கு எதிராக போராடுவதற்காகவோ விடுதலைப் புலிகளை தடைப் பட்டியலில் சேர்க்கவில்லை. விடுதலைப்புலிகள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் களில் ஈடுபடுவதனாலேயே நாம் புலிகளை பட்டியலில் சேர்த்தோம் என்று குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் பிரித்தானியாவில் தடை செய்யப்பட்ட அமைப்புகள் தொடர்பான விவாதம் தனித்தனியாக பிரபுக்கள் சபையிலும் பாராளுமன்றத்திலும் விவாதிக்கப்பட்டே நிறைவேற்றப்பட வேண்டும்.

அவ்வாறு நிறை வேற்றப்பட்ட பின்பே இது பற்றி சரியான முடிவு எடுக்கப்படும்.இரு சபைகளிலும் அங்கீகாரம் கிடைக்காவிட்டால் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் நீதிமன்றம் இது தொடர்பாக இவர்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மன வளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான பாடசாலை

(அரியம்)

மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான அன்னை கிருஷ்ணபாய் பாடசாலை மார்ச் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு கல்லடி உப்போடை சிவானந்தா வித்தியாலய விடுதியில் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜீ மகராஜ் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

கல்வி அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.தேவசிங்கம் தலைமையில் இடம் பெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக கொழும்பு இராமகிருஷ்ன மிஷன் தலைவர் ஸ்ரீமத்சுவாமி ஆத்மானந்தஜீ மகாரஜீ அவர்களும் சிறப்பு அதிதியாக இந்தியாவின் மைசூர் இணைப்பாளர் சுவாமி யுக்தா த்மானந்தஜீ மகராஜ் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக மண் முனை வடக்க பிரதேச செயலாளர் கே.கதிர்காமநாதன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை நிபுணர் டாக்டர் எம்.கணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்புகல்வி அபிவிருத்திச் சங்க இராமகிருஷ்ண மிஷன் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## தடையை ஓர் இழப்பாக புலிகள் கருதக்கூடாது

(நமது நிருபர்)

பிரிட்டன் தமது அமைப்பைத் தடைசெய்ததை விடுதலைப் புலிகள் ஓர் இழப்பாகக் கருதக் கூடாது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசின் தடை குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- புலிகள் இயக்கம் மீதான இந்தத் தடை கவலை அளிக்கின்றது. ஆனால் அது நோர்வேயின் சமாதான முயற்சிகளைப் பாதிக்காது என்று நம்புகின்றோம். புலிகள் தொடர்ந்து சமாதான முயற்சிகளில் ஈடுபட்டால் பிரிட்டன் எதிர்காலத்தில் தடையை நீக்குவது குறித்து ஆலோசிக்கும் என்றும்-பிரிட்டன் உடனடியாக இந்த தடைச்சட்டத்தை கெடுபிடியாகக் கையாளாது என்றும் - நாம் கருதுகின்றோம்.அதே வேளை - இந்த தடையை எதிர்த்து மேன்முறையீடு செய்ய வும் புலிகள் அமைப்புக்கு வழி இருக்கிறது. நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனின் தடைக்கு மத்தியிலும் புலிகள் தமது சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை மனித உரிமை மீறல் குறித்து அமெரிக்க ராஜாங்க அமைச்சர் அறிக்கை!

(நமது நிருபர்)

இலங்கையில் கடந்த வருடம் அதிகமாக மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கை படையினரால் கைது செய்யப்படுபவர்கள் பாரதூரமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அத்தோடு போரின் போது சிறை பிடிக்கப்படுபவர்களை கொலை செய்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக ரீதியாக வெளிவரும் செய்தி பத்திரிகைகளுக்கும் தணிக்கை விதிக்கப்பட்டுள்ளது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள்து,


## வவுனியாவில் தற்கொலை அதிகரிப்பு

(வவுனியா நிருபர்)

போர் அனர்த்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான மக்கள் தற் கொலை முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அறிக்கைகள் தெரிவி க்கின்றன.

கடந்த வருடம் 691 பேர் தற்கொலை முயற்சிகளில் ஈடுப் பட்டதாகவும் இவர்களில் 62 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அறிக் கையில் மேலும் கூறப்பட்டு ள்ளது.

இது கடந்த ஆண்டுகளைவிட அதிகரித்து காணப் படுவதாக தெரிவிக்கப்படுகிறது.




## தடைகுறித்து மன்னார் ஆயர் கவலை!

(நமது நிருபர்)

பிரிட்டிஷ் அரசு விடுதலைப் புலிகளை தடைசெய்ய எடுத்த முடிவு துரதிர்ஷ்டவசமானது என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்புஜோசப் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசு விடுதலைப் புலிகளை தடை செய்வது தொடர்பாக கருத்து தெரிவித்த ஆயர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகள் தாங்கள் முன்வந்து போர் நிறுத்தம் செய்துள்ள இந்த நல்ல தருணத்தில் பிழை கண்டு பிடிக்க முற்படுவது கவலை தருகிறது எனத் தெரிவித்தார்.

## வவுனியா நலன்புரி நிலையத்தில் 13 பேர் கைது !

(வவுனியா நிருபர்)

வவுனியா பூந்தோட்ட நலன் புரி நிலையத்தைச் சேர்ந்த பதின்மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை யுனிற் 02,03,ஆகியவற்றை சுற்றி வளைத்த பொலீஸார் இவர்களை அழைத்து விசாரணைக்குட்படுத்தினர்.இவர்களில் இருவர் பெண்கள் ஏனையவர்கள் ஆண்கள் ஆவர்.

இது தொடர்பாக உறவினர்கள் வவுனியா மனித உரிமைக் காரியலயத்தில் முறையீடு செய்து ள்ளனர்.

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk


## அநீதியை நீக்க சந்தர்ப்பம் உண்டு!

அடிக்கு மேல் அடி அடித்து அம்மியையும் நகர வைக்கலாம். ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பப் பலபேரைக் கொண்டு வற்புறுத்திச் சொல்ல வைத்து மெய்யாக்கலாம் என்ற புதிய தத்துவத்தை உருவாக்கி அதில் பெருமளவில் இலங்கை அரசும் சிங்களப் பேரினவாதமும் வெற்றியீட்டியிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

இதே சமயம் என்னதான் அறிவும், ஆற்றலும் அனுபவமும் நிறைந்திருந்தாலும் பிரசாரத்தில் மயங்கிவிடும் மனிதர்கள்தான் பிரித்தானியாவின் ஆட்சிப் பீடத்திலிருக்கிறார்கள் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றைத் தனது ஆளுகைக்குள் வைத்திருந்த சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாக விளங்கிய பிரித்தானியா இந்தியா உட்பட பல நாடுகளில் விடுதலை கோரி மக்கள் கிளர்ச்சி தொடங்கி, நடத்திய போது அவற்றை அடக்கி ஒடுக்குவதற்குப் பல வழிகளையும் கையாண்டு அனுபவப்பட்டிருக்கிறது.

இந்த விடுதலைக் கிளர்ச்சிகளிலும் போராட்டங்களிலும், ஈடுபட்டவர்களைப் புரட்சிவாதிகளென்றும் கிளர்ச்சிவாதிகள் என்றும் முத்திரை குத்தி அதில் சம்பந்தப்பட்டவர்களைச் சிறையில் வைத்து சித்திரவதை செய்தபோதும் கடைசியில் அவர்கள் தங்கள் போராட்டத்தில் வெற்றி பெற்றுத் தமக்கும் தமது நாட்டுக்கும் விடுதலை பெற்றுக் கொடுத்தார்கள்.

பயங்கரவாதிகள் என்று சிறைப்பிடித்த அவர்களைப் பின்னர் தேசியத் தலைவர்களாக ஏற்று மதித்துப் போற்றிய அனுபவமும் பிரித்தானியாவுக்கு இருக்கிறது.

இந்த அனுபவங்களை பிரித்தானிய ஆட்சியாளர்கள் மறந்திருந்தாலும் இலங்கையில் இப்பொழுது நடைபெறும் உள்நாட்டுப் போருக்குத் தாங்களும் முக்கிய காரணம் என்பதை வெள்ளைக் காரர்கள் நினைத்துக்கூடப் பார்க்காதிருப்பது ஏனென்று விளங்கவில்லை.

இலங்கையை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழர்களுக்கும் சுயாதிபத்திய உரிமையை வழங்கியிருந்திருந்தால் இன்றைய நெருக்கடி ஏற்பட்டிருக்காது. இவ்வளவு அழிவுகளும் நேர்ந்திருக்காது.

வெள்ளையர்களின் ஆட்சிக் காலத்தில் விடுதலை கோரிப் போராடியவர்களை கிளர்ச்சியாளர்களென்றும் பயங்கரவாதிகள் என்றும் சொல்லியிருந்தாலும் வெள்ளையர் என்றோ ஒரு நாள் தாங்கள் படைப்பலத்தால் பிடித்த இடத்தை விட்டுப் போக வேண்டுமென்பதை அவர்களே உணர்ந்திருந்தார்கள்.

இலங்கையில் இப்பொழுது ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்கள் இந்த நாட்டைச் சொந்த நாடாக உரிமை பாராட்டுபவர்கள். இதே சமயம் இந்த நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்கள் தமது சொந்த மாநிலத்தில் தமக்குள்ள உரிமைகளையும் தாம் வாழும் உரிமைகளையும் நிலை நாட்ட முடியாது. பெரும்பான்மைச் சமூகத்தினால் அடக்கி ஒடுக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே இருக்க முடியாத அவல நிலையிலுள்ளனர்.

அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதை பயங்கரவாதம் என்று பெரும்பான்மையினர் அதிகாரத்திமிருடன் பிரசாரம் செய்கின்றனர்.

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய சமயத்தில் இலங்கைக்கு புதிய அரசியலமைப்பை உருவாக்கிக் கொடுத்த பிரிட்டிஷ்காரரான வெள்ளைக்கார சேர் ஐவர்ஜென்னிங்கஸ் சுதந்திரம் பெற்ற பத்தாம் ஆண்டில் அதாவது 1958ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலகத்தைத் தூண்டி விட்டு தமிழினத்தை அழிக்க முதன் முதலாக எடுத்த முயற்சியை அறிந்து தாம் மாபெரும் தவறு செய்து விட்டதாக மனம் நொந்து கூறியிருந்தார்.

இதன் பிறகு 1983ஆம் ஆண்டு வரையும் அதன் பிறகு இலங்கையில் தமிழ் இனத்துக்கு எதிராக எடுக்கப்பட்ட அட்டூழியங்களையும் சிறிது கூட ஆராயாமல் வெறும் பிரசாரத்தில் மயங்கி தமிழ் இனத்தின் பாதுகாப்புக்காய் போராடும் விடுதலைப்புலிகளைத் தடை செய்வதற்கு பிரிட்டிஷ் அரசு எடுத்த முடிவு விவேகமற்ற செயலாகவே கருதப்பட வேண்டும்.

என்றாலும் இன்றுள்ள நிலைமையை நன்கு ஆராய்ந்து முதலில் செய்துள்ள இத்தவறைத் திருத்திக் கொள்வதற்கு இன்னமும் காலம் கடந்து விடவில்லை. பாதிக்கப்பட்டவர்கள் பிரித்தானிய அரசின் முடிவை எதிர்த்து விண்ணப்பித்து தீர்ப்பை மாற்றவும் வழியிருக்கிறது. விசாரணை மன்றங்களும் நீதிமன்றங்களும் இது பற்றி விசாரணை செய்யவிருக்கின்றன.

இனிவரும் சந்தர்ப்பத்தையாவது பிரித்தானிய அரசு நல்ல முறையில் பயன்படுத்தி முதலில் செய்த அநீதியை நீக்கிவிட முடியும்.

# வன்னித் தடையும் வஞ்சனையும்



இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு வவுனியாவுக்கு அனுப்பி வைத்துள்ள தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியலை உற்று நோக்குமிடத்து அவ் அறிவித்தல் மூலம் வட பிராந்தியத்திற்கான ஓர் எதேச்சாதிகாரமான பொருளாதாரத் தடையை கொழும்பு சுமத்தியுள்ளது என்பது வெளிப்படையாகிறது.

''ஒருவர் எடுத்துச் செல் லும் பொருளை அதிகாரமுடைய அதிகாரி விரும்பினால் தடை செய்ய லாம். மேலும் சட்ட திட்டங்களுக்கமைய அனுமதிக்கப்பட்ட பொருட்களைக் கூட, ஏதேனும் தகவல்கள் பாதுகாப்புப் பிரிவில் இருந்து வந்தால் அதன் காரணமாக, அதாவது அவ்வாறு அனுமதிக்கப்படும் பொருட்கள் எதிர்காலத்திலோ நிகழ்காலத் திலோ பயங்கரவாதிகளின் திட்ட ங்களுக்குக் கைகொடுக்கும் எனத் தெரிய வந்தால் அதனைத் தடை செய்யலாம், மேலும் ஒருவரின் பொதியை பரிசோதிப் பதை துரித ப்படுத்துவதையோ, பிற்போடுவதையோ பரிசோதனை நிலையத்தில் உள்ள படைவீரர்கள் தீர்மானிக்கலாம்'' இவ்வாறு பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்ட அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. "தடை செய்யப்பட்ட பொருட்களின் பட்டியலானது பொது மக்களையும், அரச திணைக்களங்களையும் முற்றாக ஏமாற்றும் ஓர் செயலாகும். ஓர் அதிகாரியோ, படை வீரர்களோ மக்கள் எடுத்துச் செல்லும் பொருட்களை தடை செய்வதில் தங்களது விருப்பு வெறுப்புக்களை முன்நிறுத்தியே செயற்படுகிறார்கள்" என வவுனியா பிரதேச செயலகம் உத்தியோக பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

1995ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிக்கை (இல.867/12) தடைசெய்யப்பட்ட பொருட்களைப் பட்டியலிடுகிறது. வன்னிப் பிரதேசத்திற்குத் துணிகரமான பயணங்களைத் தொடரும் மக்கள் இதன் தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களை வவுனியாவில் பெறலாம்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதிக்கும், படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிக்குமான பிரதான வாசலில் உள்ள படையினரின் பரிசோதனை நிலையமான பிரமனாளங்குளம் சோதனைச் சாவடியிலேயே வன்னிக்கு மக்கள் எடுத்துச் செல்லும் பொருட்கள் தடை செய்யப்படுகின்றன. பயணிகளிடமிருந்து தடைசெய்த நைலோன் கயிறு முதல் பெண்களின் ஆரோக்கிய உள்ளாடைகள் வரையிலான பொருட்களை ஒவ்வொரு நாளும் வன்னிக்கு மக்களை அனுமதித்த பின் மாலையில் படையினர் எரித்து அழிக்கின்றனர்.

இவ்வாறான தன்னிச்சையான செயல்கள் சட்டவிரோதமானது எனவும், இலங்கையில் அமுலில் உள்ள அவசர காலச் சட்டத்தின் பிரகாரமும், அரசால் 1995ஆம் ஆண்டு ஏப்ரல் வெளியிடப்பட்ட இந்த வர்த்தமானி அறிக்கையின் படியும் கூட இவர்களுக்கு இதனைச் செய்வதற்கு அதிகாரம் இல்லை என வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் சென்ற மாதத் தொடக்கத்தில் தெரிவித்திருந்தார்.

***கீழ்க் காணும் பொருட்களே ஏப்ரல் 1995இல் வெளியிடப்பட்ட இல. 867/12 எனும் விசேட வர்த்தமானி மூலம் தடைசெய்யப்பட்ட பொருட்களாகும்.***

1. ஆயுதங்கள், வெடிபொருட்கள்.
2. தீ வைக்கக்கூடிய பொருட்கள், பட்டாசுகள்.
3. தூரத்தில் இருந்து கட்டுப் படுத்தக் கூடியகருவிகள்.
4. தலைக் கவசங்கள் (மோட்டார் சைக்கிள் சாரதிகள் பயன்படுத்தும் தலைக் கவசங்கள்தவிர்ந்தவை),தொப்பிகள்.
5. இரு கண் தூரதரிசினி.
6. சாதாரண தூரதரிசினி.
7. திசையறிகருவி.
8. இராணுவச் சீருடைகளைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ள துணிகள்.
9. இரும்பு, உருக்கிரும்பு.
10. ஒட்சிசன் வாயு.
11. உலோகங்களைக் காய்ச்சி இணைக்கக் கூடிய உபகரணங்கள்.
12. முள்ளுக் கம்பிகள்.
13. கம்பிகளை வெட்டக் கூடிய உபகரணங்கள்.
14. மண்ணெண்ணையைத் தவிர்ந்த எழுதில் தீப்பிடிக்கக் கூடிய எரிபொருட்கள்.
15. கற்பூரம்.
16. யூரியா, யூரியாவை ஆதாரமாகக் கொண்ட பசளைகள்.
17. சிறிய பற்றரிகள்.(ஏஏ அளவு)
18. ஈயம், ஈயத்தால் செய்யப்பட்ட பொருட்கள்.
19. பெற்றோல். டீசல்.
20. மின்சாரம், மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சாதனங்கள்.
21. சிமேந்து.
22. மோட்டார் வாகனங்களின் உதிரிப் பாகங்கள்.

இப் பட்டியல் தடை செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களையும் பெயர் சொல்லி அழைக்காவிட்டாலும் மறைமுகமாக மிகவும் பரந்த அளவிலான பொருட்களைத் தடை செய்கிறது. உதாரணமாக **9**வது இலக்கத்தில் உள்ள தடை செய்யப்பட்ட பொருளானது தானாகவே நீர்க் குழாய்கள், இரும்பு ஆணிகள், கடையாணிகள், இரும்புச் சிலாகைகள் போன்றவற்றையும் உள்ளடக்கி நிற்கிறது. இதே போல் சமையல் உபகரணங்களும் இல.**18** மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் பெரிய பரப்பளவைக் கொண்ட துணி(இதில் பச்சை நிறம் கொண்டவை அல்லது ஓர் குறிப்பிட்ட அளவு தடிப்பான துணிகளை உதாரணமாகக் குறிப்பிடலாம்) என்பவை இலக்கம் **8** மூலம் தடை செய்யப்படுகிறது

இப்பட்டியல் வரம் பில்லாமல் அதிகரிப்பதில், பரிசோதனை நிலையத்தில் உள்ள அதிகாரிகளும், இலங்கைப் படையின் வவுனியா தலைமை யகத்தில் உள்ள அதிகாரிகளும், கொழும்பில் உள்ள பாதுகாப்பு அமைச்சும் பங்கேற்கின்றன. அவர்களே வன்னிக்கு எந்தெந்தப் பொருட்கள் செல்ல வேண்டும், எந்தெந்தப் பொருட்கள் தடைசெய்யப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றார்கள்.

கீழே தரப்படும் புட்டியலில் உள்ள பொருட்களைப் பாதுகாப்பு அமைச்சின் நட்வடிக்கைத் தலைமையகத்தின் அனுமதியுடன் வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்ல முடியும். எனினும் "தமிழ் நெற்" க்கு வவுனியா பிரதேச செயலக அலுவலகம் கருத்துத் தெரிவிக்கையில் இப் பொருட்களைக் கொண்டு செல்வது பற்றி இன்னும் தெளிவாகத் தெரியவில்லை எனவும், ஏனெனில் இப் பொருட்கள் பற்றிய அறிவுறுத்தல்கள் எதுவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

***பாதுகாப்பு அமைச்சின்(எம்ஓடி) இரண்டாவது பட்டியல் பின்வருமாறு.***

1. மோட்டார் சைக்கிள் உட்பட அனைத்து வாகனங்களும்.
2. மின் பிறப்பாக்கிகள்.
3. மோட்டாரோடு கூடிய தண்ணீர் இறைக்கும் பம்புகள்.
4. வாகனங்களுக்குரிய பற்றரிகள்.
5. சுழியோடும் சாதனங்கள், படகுகளில் பொருத்தப்படும் மோட்டார்கள்.
6. நார்ப் பொருட்களாலான பாய்கள்.
7. தட்டச்சு இயந்திரங்கள்.
8. சுளழலக் கூடிய இயந்திரங்கள்.
9. போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரங்கள்.
10. அச்சு இயந்திரங்கள்.
11. படப்பிடிப்பு இயந்திரங்கள்.
12. புகைப்படக் கருவிகள்.
13. இரண சிகிச்சை செய்யும் சாதனங்களும் கருவிகளும்.
14. மருந்துப் பொருட்கள், மாத்திரைகள் (கூடிய அளவுகளில்)
15. பசளைகள்.
16. விவசாயப் இரசாயனப் பொருட்கள்.
17. இரசாயனப் பொருட்கள்.
18. அலுமினியத்தாலான பொருட்கள், அலுமினியத்தை உருவாக்கக் கூடிய பொருட்கள்.
19. மண்ணெண்ணை(பெரிய அளவுகளில்)

மேற் குறிப்பிட்ட பட்டியலில் உள்ள பொருட்கள் முக்கியமாக அனுமதிக்கப் பட்டமைக்குக் காரணம், இவைகள் அரச திணைக்களங்களுக்கும் அத்தோடு சர்வதேச உதவு நிறுவனங்கள்ான யுஎன்எச்சிஆர் மற்றம் ஐசிஆர்சி போன்றவற்றின் தேவைக்காகவுமே அனுமதிக்கப்பட்டுள்ளன என வவுனியா கச்சேரியின் மூத்த அலுவலர் தெரிவித்துள்ளார். "இல்லாவிடில் இப் பொருட்களும் மக்களுக்கு தடைசெய்யப் பட்டிருக்கும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப் பொருட்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை எனில் அரச திணைக்களங்கள் கூட சுகாதாரம் போன்ற மிகவும் பாரதூரமான கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனினும் இவைகளை எடுத்துச் செல்வதற்காக எம் ஓ டி யினால் வழங்கப்பட்ட அனுமதி அதிகமில்லை, ஆனால் வவுனியா படை இணைப்பு அலுவலகத்தின் அனுமதியின் பெயரிலேயே இப் பொருட்கள் வன்னிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஏனெனில் இப் பட்டியலில் உள்ள படகில் பொருத்தும் மோட்டார் இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரங்கள் முதலியன உண்மையில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**நன்றி**

**தமிழ்நெற்**

**(நாளை தொடரும்.....)**

## இந்தியாவின் பாதுகாப்பு செலவீனங்கள் அதிகரிப்பு

(புது டில்லி)

தொடர்ச்சியாக இந்தியாவின் பாதுகாப்புச் செலவீனங்கள் மிக அதிகமாக அதிகரித்திருக்கின்றமை இது இரண்டாவது முறை.

பாகிஸ்தானின் ஆதரவுடன் இயங்கும் பிரிவினைவாதக் குழுக்களுடன் இந்தியா தொடர்ந்து போரிட்டதை அடுத்து இந்தியாவின் இராணுவ செலவுகளை உயர்த்த வேண்டியதாயிற்று. இந்த செலவானது உலகில் பெரிய நாடுகளில் நான்காவது நாடாக இருக்கும். இந்தியாவின் இராணுவத்தை நவீனப்படுத்த உதவும் என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

சென்ற ஆண்டு ரஷ்யாவிடம் இருந்து டாங்கிகளையும் போர் விமானங்களையும் வாங்கிய இந்தியப் படைகள் இந்த ஆண்டு பயிற்சி போர் விமானங்களுக்கும் விமானந்தாங்கிக் கப்பல்களுக்கும் விண்ணப்பிக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கடந்த 50 ஆண்டுகளில் மூன்று முறை தனது அண்டை நாடான இந்தியாவுடன் போரிட்டிருக்கின்ற பாகிஸ்தான் இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளை சாதகமாக எடுத்துக் கொள்ள வாய்ப்பில்லை. இதை பார்க்கும் போது சமர் செய்யும் பணியை இந்திய நிதியமைச்சர் செவ்வனவே செய்திருக்கின்றார் என்றுதான் கூறவேண்டும்.

## செச்சினியாவில் மனித உரிமை மீறல்கள்; புதை குழிக்குள் 10 சடலங்கள்

செச்சினியாவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் நடாத்துவதில் ரஷ்யா அதிக ஈடுபாடு காட்டுவதாக போரினால் பாதிக்கப்பட்டுள்ள செச்சினியாவுக்கு விஜயம் மேற் கொண்டிருந்த ஐரோப்பிய மனித உரிமை ஆணைக்குழு அமைப்பின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் புதை குழிகளில் இருந்து பத்துச் சடலங்கள் மீட்கப்பட்டதை அடுத்தே, இந்த அதிகாரி அங்கு பயணமானார். செச்சினியாவில் இடம்பெறும் அட்டூழியங்களுக்கு முடிவு கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதை தமது விஜயத்தின் போது உணர்ந்ததாக ஐரோப்பிய மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி அல்வாரோ ஜில் ரோஸ் கூறியுள்ளார்.

அங்கு இடம் பெற்றுள்ள மனித உரிமை மீறல்களின் நீதி விசாரணை விரிவாக நடக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திய அவர் இல்லையெனில் ஆட்சி அதிகாரிகள் மேல் எதுவித நம்பிக்கையும் மக்கள் வைக்க மாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## ஆப்கானில் புத்தர் சிலைகளை உடைக்க தலிபான் உத்தரவு; அமெரிக்கா கண்டனம்

(வாஷிங்டன்)

ஆப்கானில் புகழ் பெற்ற புத்தர் சிலையை உடைத்தெரிய அந்நாட்டை ஆளும் தலிபான் சர்வாதிகார அரசு பிறப்பித்த உத்தரவுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ஆப்கானில் உள்ள அனைத்து சிலைகளையும் உடைத்தெரியுமாறு தலிபான் அமைப்பின் தலைமைத் தளபதி முல்லா முகம்மது ஓமர் செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்தார்.

அல்லாவைத் தவிர வேறு எவரையும் வழிபடக் கூடாது. அல்லாவின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் இச்சிலைகளை வழிபாடு செய்ய அனுமதிக்க முடியாது. எனவே புராதன புத்தர் சிலைகள் உள்ளிட்ட அனைத்து விக்கிரகங்களும் அகற்றப்பட வேண்டும் என ஓமர் பிறப்பித்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டது. கலாசார சின்னங்களை அழிக்க தலிபான் அமைப்பு பிறப்பித்த உத்தரவு கண்டனத்துக்குரியது என்று அமெரிக்க அதிகாரி பிலிப் ரீகர் கருத்து தெரிவித்துள்ளார்.

புராதனச் சின்னங்களாக விளங்கிவரும் சிலைகளையும் சிற்பங்களையும் அழிக்கும் வேலையை தலிபான்கள் கைவிடவேண்டும் என அவர் கோரியுள்ளார். இதேபோன்ற வேண்டுகோளை ஐ.நா. அமைப்பும் தெரிவித்துள்ளது. சிலைகளை உடைத்தெரிய தலிபான் பிறப்பித்துள்ள உத்தரவு இஸ்லாமிய சகிப்புத்தன்மைக் கொள்கைக்கு முரனானது. எனவே கலாசார சின்னங்களை அழிக்கக் கூடாது என்று ஐ.நா. அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றி

(பாலசோர்)

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஏவுகணையான ஆகாஷ், செவ்வாய்க்கிழமை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது. ஒரிஸ்ஸாவில் உள்ள சந்திப்பூர் அருகே கடல் பகுதியில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. 650 கிலோ எடையுள்ள இந்த ஏவுகணை தரையிலிருந்து விண்ணில் சென்று 25 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கக் கூடியது. இதில் 55 கிலோ எடையுள்ள வெடிபொருள் இருக்கும். ஒரே நேரத்தில் பல இலக்குகளை இது தாக்கும். பகல் 12.36 மணிக்கு இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஆண்டு ஜூலை 5-ம் தேதி இதே போன்ற ஏவுகணைச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

## அமெரிக்காவுக்கு சதாம் எச்சரிக்கை!

(பாக்தாத்)

அமெரிக்கா, பிரிட்டனின் விமானத் தாக்குதலுக்கு ஈராக் பதிலடிகொடுக்கும் என்று அதிபர் சதாம் ஹுசைன் எச்சரித்துள்ளார். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஈராக் ஆயுதங்களை குவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவும், பிரிட்டனும் தங்களது வலிமையைக் காட்ட ஈராக் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் அந்த இருநாடுகளும் அதற்கு தகுந்த விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சந்திரிகா மற்றொரு கண் தானம்

(கொழும்பு)

இலங்கை அதிபர் சந்திரிகா குமாரதுங்கா தனது ஒரு கண்ணை தானம் செய்ய முன் வந்துள்ளார். 1999-ம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின்போது ஒரு கண்ணில் காயம்பட்டதால், அந்தக் கண்ணில் பார்வையை இழந்தார். தான் இறந்தபிறகு, பார்வையில்லாதவருக்குப் பயன் படும் வகையில் மற்றொரு கண்ணைத் தானமாக வழங்க அவர் முன்வந்துள்ளார்.

ஒரு லட்சம் கண்களை தானமாகப் பெறும் நோக்கில் நடைபெறும் முகாமைத் தொடங்கி வைத்த அவர், தனது ஒரு கண்ணை தானமாக அளிப்பதற்கான உறுதி மொழிப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். இலங்கையில் புத்தமதத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் உடல் உறுப்புகளை தானமாக அளிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். 1954-ம் ஆண்டிலிருந்து இதுவரை 62 நாடுகளுக்கு 42,900 கண்களை தானமாக வழங்கியிருப்பதாக இலங்கை கண் தான சங்கத்தினர் கூறினர்.

## வீரப்பனின் கூட்டணியில் ஒருவர் கைது

(புதுடில்லி)

சந்தனக் கடத்தல் வீரப்பன் கூட்டணி ஒருவரை இந்திய தமிழக கர்நாடக அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட கிருஷ்ணமூர்த்தி என்னும் இவர் நடிகர் ராஜ்குமார் கடத்தல் சம்பவத்துடன் பெரிதும் தொடர்பு உடையவர் என தமிழக கர்நாடக அதிரடிப்படை இன்ஸ்பெக்டர் அருளானந்தன் தெரிவித்துள்ளார்.

கிரிஷ்ணமூர்த்தி தொடர்பான விசாரணைகளை அவர் மேலும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார்.

## உலக வலம்

தொகுப்பு :- பௌஸி

## எகிப்திய இளவரசிக்கு மூன்று வருட சிறைத்தண்டனை

12 இலட்சம் அமெரிக்க டாலர்களுக்கு தங்க ஆபரணங்கள் கொள்வனவு செய்து அவற்றுக்கான பணத்தை செலுத்த தவறிய குற்றத்துக்காக சவூதி அரேபிய இளவரசி ஒருவருக்கு மூன்று வருட சிறைத் தண்டனை எகிப்திய நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இளவரசி சென் அல்ஃபாஹியுடன் வேலை செய்யும் லெபனானைச் சேர்ந்த ஒருவருக்கும் மூன்று வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இளவரசியின் செயலாளரும் எகிப்து நாட்டவருமான அஹ்மட் அவாட் என்பவருக்கு இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த மூவர் பற்றிய வழக்கு விசாரணைக்கு அவர்கள் ஆஜர் ஆகாத நிலையிலேயே எகிப்து நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

குற்றவாளியான இளவரசியும் மற்ற இருவரும் எகிப்தை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது. இதே வேளை நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய அவர்களுக்கு 10 நாள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

## சேது சமுத்திரத் திட்டம் கிடப்பில் போடப்படுமா? புலிப் பயத்தினால் இம்முறை நிதி ஒதுக்கீடு இல்லை

(நமது சிறப்பு நிருபர்)

(புதுதில்லி)

சேதுசமுத்திரம் கால்வாய் திட்டத்துக்கு இந்த ஆண்டு மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகளும், பல்வேறு அமைப்புகளும் நீண்ட காலமாகக் கோரி வந்தன. இதனடிப்படையில், கடந்த ஆண்டு பட்ஜெட்டில் அத்திட்டம் குறித்து சாத்தியக் கூறுகளை ஆராய மத்திய அரசு ரூ.4.8 கோடி ஒதுக்கியது.

கடந்த ஆண்டு பிரதமர் தமிழகம் வந்தபோது, இத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று உறுதியளித்தார். சமீபத்தில் சென்னையில் எண்ணூர் துறைமுகம் திறப்பு விழாவின் போதும், இத் திட்டத்தை செயல்படுத்த போதிய நிதி ஒதுக்கப்படும் என பிரதமர் தெரிவித்தார். எனினும் இத் திட்டத்துக்காக 2001-02-ம் ஆண்டு பட்ஜெட்டில் எந்த நிதியும் ஒதுக்கப்படவில்லை.

இத் திட்டத்தை நிறைவேற்ற நிதிப்பற்றாக்குறை காரணம் என்று கூறப்பட்டாலும், விடுதலைப் புலிகள் பிரச்சினை காரணமாகவே இத் திட்டத்தை மத்திய அரசு தொடர விரும்பவில்லை என்று தெரிகிறது. கடந்த வாரம், திராவிடர் பேரவை பொதுச் செயலரும், தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக்கழக அறங்காவலருமான என். நந்திவர்மன், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸை சந்தித்து இதுகுறித்து வலியுறுத்திய போது, இத் திட்டத்தை செயல்படுத்தினால் விடுதலைப் புலிகளால் நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது என்று குறிப்பிட்டார்.


எதிர்பார்த்தபடி, மத்திய பட்ஜெட்டில் அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இதுகுறித்து, மதிமுக பொதுச் செயலர் வைகோ எம்.பி ஏமாற்றம் தெரிவித்துள்ளார். ஆய்வுப் பணிகளுக்காக கடந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டது. எனினும் இத் திட்டத்தை தொடர்ந்து நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு குறித்து பட்ஜெட்டில் குறிப்பிடப்படாதது ஏமாற்றமளிக்கிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இயக்குனர் விசு குவைத்தில் கலை நிகழ்ச்சிகள்

(குவைத்)

குஜராத் பூகம்பத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்கு நிதி திரட்டும் முகமாக இயக்குநர் விசு தலைமையில் பேச்சு மன்றம் ஒன்றும் கலை நிகழ்ச்சிகளும் குவைத்தில் நடை பெற்றுள்ளது.

இதன் மூலம் தமிழ் அமைப்புகளின் ஒத்துழைப்புடன் 525 இலட்ச ரூபாவை விசு வசூலித்திருப்பதாகவும் மேலும் இரத்தப்புற்று நோயால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு பையன் மணிமேகலை பிரசுரத்தின் மூலம் 50 ஆயிரம் ரூபா பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்திய நிதி அமைச்சர் யஸ்வந்த் சிங்

## 2001ஆம் ஆண்டுக்கான பாடசாலை அபிவிருத்தி சங்க நிருவாகிகள்

அமைமையில் மட்/ ...திவெளி சித்தி விநாயகர் ...ந்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டத்தில் பெரும் தொகையான பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமாக உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா இப்பாடசாலைக்கு கட்டட வசதி செய்து தருவதாக உறுதி அளித்துள்ளதாகவும் அதிபர்.சி.குழந்தவேல் கூறினார்.

இப்பாடசாலையில் ஆண்டு 1 தொடக்கம் 11ம் ஆண்டு வரையுமே வகுப்புக்கள் உள்ளன. 28 வகுப்புப் பிரிவுகள் உண்டு. மாணவர்களுக்கு இடவசதி இல்லை. தற்காலிக கொட்டிலிலும் மரநிழலிலும் வகுப்புகள் தற்பொழுது நடாத்தப்பட்டு வருகின்றன. இதனை உரிய அதிகாரிகளுக்கு அறிவித்ததாகவும் கூறினார்.

பின் நடப்பு வருடத்திற்கான நிருவாகத் தெரிவும் இடம் பெற்றது.

தலைவர்:- சி.குழந்தவேல்(அதிபர்)
செயலாளர்-சி.புவனேந்திரன்
பொருளாளர்:-மு.இராஜதுரை

நிருவாக உத்தியோகஸ்தர்கள்

திரு.ம.சிவசுந்தரம்
திரு.து.முரளிதரன்
திரு.வே.சின்னத்தம்பி
திரு.மு.இராமையா
திரு.ச.நடராஜா
திரு.இ.நடராஜா
திரு.ச.நாகலிங்கம்
செல்வி.ந.கோமதி
திருமதி.அ.உதயகுமார்
திருமதி.ச.தனியாசலம்

## பதினாறாயிரம் பேர் சைக்கிள் கோரி விண்ணப்பம்

யாழ் வன்னிப்பகுதியில் உள்ள சுமார் பதினாறாயிரம் பேர் சைக்கிள் பெறுவதற்காக படை அதிகாரியிடம் விண்ணப்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## மார்ச் ஏழு விசாரணை

(நமது நிருபர்)

பண்டாரவளை பிந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலை வழக்கு விசாரணை மார்ச் 7ம் திகதி நடைபெறவுள்ளது.

திங்கட்கிழமை பண்டாரவளை நீதவான் முன்னிலையில் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கு விசாரணை நடைபெற்றது.

மேற்படி விசாரணையின் போது விளக்க மறியலில் வைக்கப்பட்டடிருந்த கிராம வாசிகள் 28 பேர் மற்றும் ஒரு இராணுவ அதிகாரி உட்பட 15 பொலிஸ்சாரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## வெகுஜனத் தொடர்பு சாதன கருத்தரங்கு

(மைக்கல்)

திருக்கோணமலை மட்டக்களப்பு மறை மாவட்ட சமூகத் தொடர்பு நிலையம் நடாத்தும் 'வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஓர் அறிமுகம் - தொடர்பான கருத்தரங்கு மார்ச் 5ம் திகதி மட்டக்களப்பு அருள் ஒளி இல்ல மண்டபத்தில் நடைபெறும்.

காலை 9 மணிக்கு ஒளிவிளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். இதில் வரவேற்புரை, சிறப்புரை, தொடர்பாடலும், தொடர்பூடகங்களும், இன்றைய நிலை, ஊடகங்களும் ஊடாட்டமும் இயங்கும் நிலை, பகிர்வு, விளையாட்டாகத் தொடர்பாடல், குறுந்திரைப்படம், பகிர்வு, தொடர்பாடலும் தொடர்பூடகங்களும் எமது செயற்பாடு. மதிப்பீடு போன்ற தலைப்புக்களில் நிகழ்வுகள் நடைபெறும்.

மேற்படி கருத்தரங்கில் மன்னார்ப்பகுதி கலைஞர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இந் நிகழ்வை நெறிப்படுத்துபவர் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.ஜெயசங்கர்.

# செய்திச்சுருக்கம்

### சிறுமிகளை வெளிநாட்டுக்கு அனுப்பும் முயற்சி தோல்வி

போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து அழகிய சிறுமிகளை வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாக கூறி மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்ப எடுத்த முயற்சி பதுளைப் பொலிஸாரால் கண்டுப்பிடிக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு 14 வயது சிறுமிகளும் ஒரு 16 வயதுப் பெண்ணும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் ஒருவரால் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்புவதற்கு முன்பு பதுளை வெளிநாட்டுத் தொழில் பணியகத்தில் பயிற்சிக்காக ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

இங்கு இச்சிறுமிகளில் ஒருவர் பூப்படைந்ததையடுத்து மதப்பெரியார் ஒருவருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் இது குறித்து சிறுமிகளை விசாரணை செய்து விட்டு பதுளைப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து இம் முயற்சி கண்டு பிடிக்கப்பட்டது.

### கடைக்குச் சென்ற சிறுமி மீது பாலியல் வல்லுறவு

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெல்லன் கரை கிராமத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமியொருவர் 20வயது இளைஞன் ஒருவனால் பாலியல் வல்லுறவுக்குள்ளாகியுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் தாயாரின் வேண்டுகோளுக்கிணங்க கடைக்குச் சென்ற இச்சிறுமியை இவ் இளைஞன் காட்டுக்குள் இழுத்துச் சென்று பாலியல் குற்றம் புரிந்ததாகக் கூறப்படுகிறது.

கடைக்குச் சென்ற சிறுமி நெடுநேரமாகியும் வீடு திரும்பாததால் சிறுமியின் தாயார் தமது மகளைத் தேடிச் சென்றுள்ளார். செல்லும் வழியில் பக்கத்துக் காட்டிலிருந்து முனகல் சத்தம் கேட்டு அங்கு சென்ற போது அவர் தமது மகளை அலங்கோல நிலையில் கண்டுள்ளார்.

குறிப்பிட்ட இளைஞன் தன்மீது பாலியல் குற்றம் புரிந்ததாகச் சிறுமி தெரிவித்ததையடுத்து சிறுமியின் தாயார் இது சம்பந்தமாக கற்பிட்டிப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். துரித நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் இளைஞனைக் கைது செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக கற்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### 19 குடும்பங்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பனவு

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 25ம் திகதி இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் காரணமாக உயிரிழந்த 19 தமிழ் தடுப்பு கைதிகளின் குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடு வழங்குவதைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விடுத்த பணிப்புரையை அடுத்து புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை எடுத்த நடவடிக்கைகளின் பேரில் நேற்று ஜனாதிபதியினால் நஷ்ட ஈடு வழங்கப்பட்டது.

படுகொலை தொடர்பில் நடைமுறையிலுள்ள நஷ்டஈடு 50 ஆயிரம் ரூபாவாகும். எனினும் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் நஷ்டஈட்டுத் தொகை இரண்டு லட்சமாக அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

### பிக்குமார் பற்றாக்குறையால் விகாரைகள் முடப்படுகின்றன

பௌத்த மதகுருமார்கள் பற்றாக்குறை உள்ளது. இதனால் இன்று பல விகாரைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் பல விகாரைகள் மூடப்படவுள்ளன. பொருளாதார நெருக்கடி காரணமாக விகாரைகளைப் பராமரிக்க முடியாத நிலையும் தோன்றியுள்ளது. எனவே எமது பௌத்த விகாரைகளை பாதுகாக்க மக்கள் முன்வரவேண்டும். இவ்வாறு பிரதமர் ரத்தின சிறி விக்கிரம நாயக்க கூறினார்.

கம்பஹா வித்தியாவின் பிரிவெனவின் 75ம் வருட நிறைவு விழாவில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றும் போதே இதனைக் கூறினார்.

### புலியுடனான மோதலில் பாரிய மனித உரிமை மீறல்கள்

அமெரிக்க ராஜாங்க இலாகா இலங்கையில் கடந்த வருடம் மனித உரிமைகள் நிலமையை ஒட்டி நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது. அதில் கடந்த இரண்டாயிரமாம் ஆண்டில் இடம் பெற்றிருக்கக் கூடிய மனித உரிமை மீறல் சம்பவங்களுடன் அதற்கு முன்னர் இடம் பெற்ற மனித உரிமை மீறல்களையும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

அரசாங்கம் புலிகளுக்கு எதிரான தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்கி அவைகளை வழிநடத்துவதாகத் தோன்றுகிறது. சில சந்தர்ப்பங்களில் இக்குழுக்கள் அரச அதிகாரத்தை விட்டு சுதந்திரமாகவும் நடந்து கொள்வதாகத் தோன்றுகின்றது

கடந்த வருடத்தில் பாதுகாப்பு படையினர் சிலர் பாரதூரமான மனித உரிமை மீறல் துஷ்பிரயோகங்களைச் செய்திருக்கின்றனர்.

கிளர்ச்சியினால் பாதிக்கப்படாத பகுதிகளில் அரசு பொதுவாக மனித உரிமைகளை மதிக்கிறது. ஆனால் சிலபகுதிகளில் பாரதூரமான பிரச்சினைகள் உள்ளன. எல்.ரீ.ரீக்கு எதிராக தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் துஷ்பிரயோகங்கள் நிகழ்கின்றன. பாதுகாப்புப் படைகள் சட்டத்துக்கு புறம்பாக ஏராளமான கொலைகளை செய்துள்ளன.

போர்க் கைதிகளாகப் பிடிக்கப்பட்டவர்களும் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தடுத்து வைக்கப் பட்டிருக்கிறார்கள். தடுத்து வைக்கப் பட்டவர்களை ராணுவமும் பொலிஸாரும் சித்திரவதை செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

## சொந்த மண்ணில்........

(8ம் பக்க தொடர்ச்சி)

கோரிக்கைகளை முன்வைத்து நடாத்துவதில் என்ன தவறு இருக்கிறது.

அதற்காக வடக்கில் தொடங்கப்பட்ட ஒன்று கிழக்கில் தொடங்கக் கூடாது என்று கட்டுரையாளரின் ஆதங்கம் இருப்பது மன சோதனையை அளிக்கின்றது. இதற்காகத்தான் பிரதேசவாதத்தை கிளப்பி சீர்குலைக்க வேண்டாம் என இரா.துரைரெத்தினம் சுட்டிக்காட்டியிருந்தார். பொங்கு தமிழ் எழுச்சி என்று ஏன் கிழக்கு மாகாண பிரதேசத்திற்கு பொருத்தமானதாக அமையவில்லை என கட்டுரையாளர் சிந்தித்து வீண் குழப்பத்திற்கு ஆளாகினாரோ புரியவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் இந்த தேசபிமானிகள் பிரதேசவாதம் என ஏன் கூறக்கூடாது என கேள்வி எழுப்பும் கட்டுரையாளர் சு.சீவரெத்தினம் இராணுவ, அரசியல் நிர்வாக திட்டமிடல்களையும், போராட்ட தந்திரோபாயங்களையும் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடுகின்றது என்பதை கோடிட்டுக்காட்டியுள்ளார்.

ஐயா தமிழீழ விடுதலைப்புலிகள் அவர்களின் இலக்கு எப்போதும் ஒன்றுதான் அந்த இலக்கை அடையும் பொருட்டு பிரதேச பூகோள அமைப்பை கருத்தில் கொண்டு நடவடிக்கைகளில் பல வடிவங்களை பிரதேசங்களுக்கு ஏற்ப செயல்படுகிறார்களே தவிர அவர்களின் கொள்கையை மாற்றவில்லை. அதற்காக 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற பெயரை ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒவ்வொரு பெயர் வைத்து அழைக்கவில்லை. அவர்களின் பணியை பிரதேசவாதமாக பார்ப்பதற்கு இங்குள்ளவர்கள் முட்டாள்கள் இல்லை. அதற்காக அவர்களை வீணாக இதற்குள் இழுத்து கொச்சைப்படுத்த வேண்டாம்.

''பொங்கு தமிழ்'' என்ற பெயரை வடக்கிலும், வைத்து விட்டார்கள் கிழக்கில் முஸ்லிம் மக்களும் உள்ளதால் வேறு பெயர் வைக்க வேண்டும் என்ற சின்னத்தனமான சிந்தனையானது தமிழ் மக்களின் ஒற்றுமையை சீர்குலைக்கும் ஒரு செயலாகவே அமையும்.

கிழக்குப் பல்கலைக் கழகத்தால் நடாத்தப்பட்ட பொங்கு தமிழ் சர்வதேச சமூகங்களின் பார்வையை ஈர்த்துள்ளது தானே. இவ்வாறு சர்வதேசங்களின் பார்வையை திருப்பியுள்ளது என்றால் அது சரியான போராட்டம் என்று தான் கூறவேண்டும்

இன்று தமிழர்கள் பல துன்ப துயரங்களில் வெந்து சொந்த மண்ணில் நொந்து சாகும் போது வடக்கு கிழக்கு தமிழர்கள் தொடர்ந்தும் பொங்கு தமிழ் எழுச்சியினை காட்ட வேண்டும் இதற்காக வடக்கில் ஆரம்பமானது கிழக்கில் வேறொன்றை தொடங்குவோம் என்று சிந்திப்பவர்கள் இப்போராட்டத்தை கொச்சப்படுத்துபவர்களே என்று தான் கூற முடியும்.

எனவே விதண்டாவாதமான கருத்துக்களைவிட்டு செயலில் காட்ட முன்வருவோம்.

கட்டுரையாளர் சு.சீவரெத்தினத்திற்கு இன்னும் ஒன்றையும் கூற விரும்புகின்றேன். தங்களின் கட்டுரைக்கு பதில் எழுதிய கோ.றூஷாங்கன், இரா.துரைரெத்தினம், பா.வேணுகோபால், பா.அரியநேத்திரன் ஆகிய நாம் எல்லோரும் எங்களின் சொந்த எண்ணக் கருத்துக்களை முன்வைத்தோமே தவிர எங்கள் கருத்துக்களில் முரண்பாடு எதுவும் இல்லை.

மொத்தத்தில் தமிழ் மக்களின் எழுச்சி வெளிக்கொணரப்பட வேண்டும். அதற்காக கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் மேற்கொண்ட பொங்கு தமிழ் எழுச்சி வெற்றி பெறவேண்டும். அதை கொச்சப்படுத்தி எதிரிக்கு ஒரு வாய்ப்பாக அமையக் கூடாது என்பதற்காகவே தான் இவ்வாறான கருத்துப்பரிமாற்றங்களை எழுதியிருந்தோம்.

நடத்தப்பட்ட பொங்கு தமிழ் எழுச்சியை தமிழர்களாய் பிறந்த ஒவ்வொருவரும் பாராட்ட வேண்டுமே தவிர அதை விமர்சனம் செய்து தூற்ற வேண்டாம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.

# சந்திரிகா கொலை முயற்சியும் புலிகள் மீதான குற்றச்சாட்டில்!

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை 1999 இறுதிப் பகுதியில் படுகொலை செய்வதற்கு விடுதலைப்புலிகள் முயற்சி எடுத்தார்கள் என்ற விவகாரமும் பிரிட்டனில் புலிகளைத் தடை செய்யும் முயற்சிக்கான காரணமாகக் காட்டப்பட்டுள்ளது.

அங்கு தடை செய்யப்படுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள 20 அமைப்புகளையும், தடைசெய்வதற்கு சிபாரிசு செய்வதற்கான காரணங்களை நேற்று பிரிட்டன் நாடாளுமன்றில் உள்துறை அமைச்சர் சமர்ப்பித்தார்.

ஒவ்வொரு அமைப்புக் குறித்தும் சுருக்கமான விவர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக் குறித்துக் கூறப்பட்ட காரணங்கள் வருமாறு:-

ஆயுதம் ஏந்தி தனிநாடு கோரிப் போராடும் விடுதலைப் புலிகளின் போராட்டத்தினால் இரு தரப்பிலும் மொத்தம் 60 ஆயிரம் பேர் வரை உயிரிழந்திருக்கின்றார்கள். இராணுவ நிலைகளையும், அரசியல் தலைவர்களையும் இலக்கு வைத்துப் புலிகள் தாக்குதல் நடத்தி வருகின்றார்கள். இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி உட்பட பலரைக் கொல்வதற்காகத் தற்கொலைத் தாக்குதல்களைப் புலிகள் நடத்தி வருவதாக இலங்கை அரசுத் தரப்புக் கூறுகின்றது.

புலிகள் நேரடியாக மேற்கு நாட்டவர்கள் மீது தாக்குதல் எதையும் தொடுக்கவில்லை. எனினும் புலிகளின் தாக்குதல்களில் சிக்கி மேற்கு நாட்டவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரிட்டனில் புலிகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடவில்லை. அவர்களது நாட்டுக்கு வெளியே அவர்கள் நடத்திய தாக்குதலாக ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் காட்டப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூதூர் மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

(மூதூர் நிருபர்)

மூதூர் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று ஒரு நாள் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டனர்.

பாடசாலை மாணவர்கள் நேற்று காலை பாடசாலை வளாகத்தில் இருந்து மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் பணிமனை வரை சென்று வலயக்கல்விப் பணிப்பாளரிடம் மகஜர் ஒன்றினைக் கையளித்துள்ளனர்.

விஞ்ஞான ஆசிரியர்களை நியமிக்க கோரியும், பாடசாலைக்கான கட்டிட வசதியை ஏற்படுத்தித் தருமாறு கோரியுமே மேற்படி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

(மண்முனைப்பற்று நிருபர்)

மட்டக்களப்பு - ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் அண்மையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வு நடைபெற்றது.

இக்கருத்தரங்கு பற்றி மேலும் தெரியவருவதாவது:-

இன்றைய காலகட்டத்தில் மக்களின் தேவை என்ன? அதற்கு என்ன என்ன காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றது என்பது பற்றியும் சுகாதாரம், சூழல், இன ஒற்றுமை பற்றி இப்பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கில் கூறப்பட்டது. இக் கருத்தரங்கு நிகழ்விற்கு சரீரம் சிறிலங்கா தேசிய மன்றம் அனுசரணை வழங்கியிருந்தது.

# மன்னாரில் கைதான 13 பேரும் தொடர்ந்தும் தடுப்பு காவலில்!

(வவுனியா நிருபர்)

மன்னாரில் நாசகாரத் தடுப்புப் பொலிசார் சந்தேகத்தில் கைது செய்த பதின்மூன்று பேரையும் தொடர்ந்து தடுத்து வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரைச்சேர்ந்த ஜோன்ஜன்றிஸ் வான்(28), கிளிநொச்சியை சேர்ந்த சுப்பிரமணியம் ஜோதிலிங்கம்(22), மடுவைச்சேர்ந்த செபஸ்தியன்பிள்ளை அந்தோனிதாஸ்(20), அல்பேட் கிறிஸ்டின் டயஸ்(22), முல்லைத்தீவைச் சேர்ந்த யோகநாதன் ரமேஸ்குமார்(26), புதுக்குடியிருப்பைச் சேர்ந்த திருநாவுக்கரசு சுந்தரலிங்கம்(21), திருக்கோணமலையைச் சேர்ந்த கந்தசாமி முரளீதரன்(23), முல்லைத்தீவைச் சேர்ந்த நித்திய ராஜ் சசிக்குமார்(22), மன்னாரைச் சேர்ந்த அன்ரனி ரங்கநாதன் குருஸ்(22), சந்திரலிங்கம் சசிதரன்(24), அருணாசலம் திவாகரன்(20), வவுனியாவைச் சேர்ந்த சுப்பையா முத்துராசா(16) ஆகியோரே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களாவார்.

இவர்களை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு சென்று பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஜனாதிபதி விளக்கமளிப்பார்

(நமது நிருபர்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு மார்ச் 2ம் திகதி கூடவுள்ளது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயம் மற்றும் நோர்வேயின் முன் முயற்சிகள் தொடர்பாக விளக்கம் அளிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சிரமதான வைபவம்

(மண்முனைப்பற்று நிருபர்)

மண்முனைப்பற்று பிரதேச சபை நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் சிரமதானத்தினை ஏற்பாடு செய்திருந்தது. இச் சிரமதான நிகழ்வில் இப் பிரதேச சபையின் செயலாளர் சின்னத்தம்பி திலகவதியும் கலந்து கொண்டார்.

## விமானப்படை பொன்விழா இந்தியக்குழு சாகசம்

(கொழும்பு)

விமானப்படையினரின் பொன்விழாக் கொண்டாட்டம் மார்ச் 9ம் திகதி கொழும்பில் நடைபெற வுள்ளது.


இக்கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியா பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து விமானப்படைத் தளபதிகள் வரவுள்ளனர்.

அதே சமயம் இந்திய சாகஷக் குழுவினரின் சாகசக் காட்சியும் இடம் பெறவுள்ளது.

## ஆங்கில பயிற்சி வகுப்பு

(மண்முனைப்பற்று நிருபர்)

மண்முனைப்பற்று பிரதேச சபையினால் கடந்த மாதம் 15ம் திகதி ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பமாகின. இப்பயிற்சி வகுப்புகள் இப் பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலையினை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளிற்காக நடாத்தப்பட்டு வருகிறது. மேலதிகமாக இவ் ஆங்கில பயிற்சி வகுப்பில் இணைய விரும்பும் புதிய மாணவர்கள் புதன், வெள்ளி, ஆகிய இரு தினங்களிலும் பி.ப 3.00 மணியளவில் மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு சமூகமளிக்கும் படி இப்பிரதேச சபையின் செயலாளர் சின்னத்தம்பி திலகவதி தெரிவித்தார்.




**அண்மையில் கல்முனை நகர லயன்ஸ் கழகத்தினர் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியது. லயன்ஸ் கழக உபதலைவர் லயன் யூ.எல்.எம்.அசீன் உலர் உணவுப் பொதியொன்றை பாதிக்கப்பட்ட ஒருவருக்கு வழங்குவதையும் அருகில் லயன்ஸ் கழக செயலாளர் ஏ.தயாளன், லயன்ஸ் கழக புனர்வாழ்வுத் தலைவர் எந்திரி.கா.பகீரதன், லயன் எம்.வை.ஏ.சக்கூர், லயன் க.மகேஸ்வரன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.**

**(களுவாஞ்சிக்குடி நிருபர் காரைதீவு ரவி)**

# சமாதானம் வேண்டி நாளை மட்டுநகரில் முதலாவது யாகம்!

(நமது நிருபர்)

நாட்டில் நிரந்தர சாந்தியும் சமாதானமும் ஏற்பட வேண்டும் என்று எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலடி புதுமுகத்து வாரத்தில் அமைந்துள்ள சப்தரிசி ஆலய வளாகத்தில் ஸ்ரீ மிருத்யுஞ் ஜெய காயத்ரி யாகம் நடைபெறவுள்ளது.

மேற்படி வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் யாக சாலையில் முதன் முறையாக இந்த யாகம், அதுவும் நாட்டில் சமாதானம் வேண்டி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

கிழக்கிலங்கையில் முதன் முறையாக சமாதானம் வேண்டி இந்துக்கள் யாகம் நடத்துகிறார்கள்.மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ள காயத்ரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகள் யாக பூசை செய்யவுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை காயத்ரி தீட்சை பெற்ற பக்தர்கள் மேற்கொண்டுள்ளனர்.

யாகம் முடிந்த பின்னர் சுவாமிகள் மேற்படி யாகத்தின் ஆன்மீக தத்துவ விளக்கம் பற்றி ஆன்மீக விஞ்ஞான விளக்கம் கொடுத்து பக்தர்களை ஆசீர்வதிப்பார். இதே வேளையில் அவர் நாளை வெள்ளிக்கிழமை காலை அரசடி மகாஜன கல்லூரியில் அருளுரை ஆற்றுவார்.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் வேண்டி மற்றுமொரு ஸ்ரீ மிருத்யுஞ் ஜெய



காயத்ரி யாகம் தம்பிலுவில் காயத்ரி தபோவனத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு முருகேசு சுவாமிகளால் செய்யப்படவுள்ளது.

## ஆசிரியர்களிடம் கொள்ளை

(நமது நிருபர்)

இரு ஆசிரியர்களிடம் இருந்து தங்க மாலைகளை இரு இளைஞர்கள் கொள்ளையிட்ட சம்பவம் ஒன்று அபயசேகரகம எனும் இடத்தில் நடந்துள்ளது

கத்திகளைக் காட்டிப் பயமுறுத்திய இரு இளைஞர்களும் தங்களிடம் பாடம் கற்ற மாணவர்கள் என அவ் இரு ஆசிரியர்களும் தெரிவித்துள்ளனர்.

இவ் இருவரும் இச் சம்பவத்திற்குப் பிறகு அக் கிராமத்தை விட்டே வெளியேறிவிட்டதாக அப்பிரதேச பொலிசார் தெரிவிக்கின்றனர். இவ் இரு ஆசிரியர்களும் பாடசாலை முடிந்து வீடு திரும்பும் வழியிலேயே இச் சம்பவம் நடந்திருக்கிறது.

கொள்ளையர்களால் பறிமுதல் செய்யப்பட்ட மாலையின் பெறுமதி 15,000 ரூபாய் என தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுத முனையில் கொள்ளை

(நமது நிருபர்)

சிலாபத்தில் உள்ள ஓர் கடையில் வெளிநாட்டு, உள்நாட்டு ரூபாய்கள் பெருமளவில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

நான்கு பேர் கொண்ட இக் கொள்ளைக் கூட்டத்தினர். இக் கடை வியாபாரம் முடிந்து மூடும் தறுவாயில் உள்ளே புகுந்து ஆயுதங்களைக் காட்டி இக் கொள்ளையைப் புரிந்துள்ளார்கள்.

''லீரா'' எனப்படும் அயல் நாட்டு பணம் 41∴2 லட்சமும், 700 அமெரிக்க டொலர்களும், உள்ளூர்ப்பணமான 4 லட்சம் ரூபாய்களும் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஒரு செலூலர் தொலைபேசியையும் அக் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுள்ளதாக அக்கடையின் ஊழியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# ஒரு கட்டடம் கூட இல்லாமல் மர நிழலிலும் கொட்டகையிலும் கல்வி பெறும் மாணவர்கள்

## கருத்தரங்கு

### இது உங்கள் பக்கம்

மீண்டும் கருத்தரங்கு இப்பகுதியில் ஆரம்பமாகியிருக்கிறது. தேர்தலுக்குப் பின் மக்கள் பிரதிநிதிகளிடம் எதிர் பார்க்கும் தேவைகள், அரசியல் நிலைமை நோர்வேயின் சமாதான முயற்சிகள் போன்ற பல விஷயங்களில் வாசக நேயர்கள் தங்கள் கருத்துக்களை இப்பகுதியில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறோம். இனி இது உங்கள் பக்கம்.

ஆசிரியர்

## கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் மதுரங்கேணிக்குள அரசினர் பாடசாலையின் அவல நிலை

எஸ்.கே.தாஸ்

இந்நாட்டின் வருங்கால சொத்துக்கள் மாணவர்களே, மாணவர்கள் சிறப்பான முறைகளில் கல்வி கற்பதற்குத் தேவையான பல்வேறு திட்டங்களைச் செய்து தான் வருகின்றது. ஆனால் அது எல்லா மாணவர்களையும் சென்றடைகின்றதா என்பது தான் கேள்வி? கல்வி கற்பதற்கான உரிமை மட்டுமிருந்தால் போதாது மாணவர்கள் தங்கு தடையின்றி கல்வியைத் தொடரக் கூடிய சூழலை அரசு உருவாக்க வேண்டும். நகர்புற பாடசாலை



கம்பு தடிகளால் அமைந்த ஓலைக்கூரையின் கீழ்

மாணவர்கள் மட்டுமே சகல வசதிகளுடன் கல்வி கற்க வேண்டும் என்று எந்தவொரு சட்டத்திலும் இல்லாத போது ஏன் இராணுவக் கட்டுப்பாடற்ற மாணவர்களை அது பாதிக்க வேண்டும். பண்டைய கால கல்வி முறை போன்று இன்று பல பாடசாலைகள் மரநிழலிலும், ஓலைக் கொட்டகைகளிலும் இயங்கி வருகின்றன. இது இவ்வாறிருக்க நகர் புற பாடசாலைகளிலும், இராணுவக்கட்டுப்பாட்டு பிரதேசங்களிலும் உள்ள பாடசாலைகளில் காணப்படும் கட்டிட, தளபாட வசதிகள் ஏன் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. மாணவர்கள் என்றால் எல்லோரும் சமமானவர்களே. கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைக்கு பாடசாலை வளங்கள் மேலதிகமாகக் காணப்படும் பொழுது, ஏன் கட்டுப்பாடற்ற பாடசாலைகளில் மாணவர்கள் தரையில் அமர்ந்து கல்வி கற்கக் கூடிய சூழ்நிலை தோன்ற வேண்டும். நகர்புற பாடசாலைக்கு ஒவ்வொரு பாராளுமன்றப் பிரதி நிதியும் அபிவிருத்திக்கு உதவும் போது கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள பாடசாலைக்கு அக்கட்டடங்கள் எழுவதில்லை. இங்கு காணப்படும் புகைப்படங்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான மதுரங்கேணிகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் அவல நிலை தான். இந்த நவீன யுகத்திலும் இப்படியான நிலையில் மாணவர்கள் கல்வி கற்பது இம்மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்களில் படவில்லை போலும். நகர்புற பாடசாலைக்கு தேவைக்கு அதிகமான கட்டடங்கள், வளங்கள் இருக்கின்ற போதும் மேலும் கட்டடங்களைப் பெற்றுக் கொடுத்து பெயர் தேட நினைக்கின்றார்கள் போலும். தமிழ் மக்களுக்கு கடைசி அடிப்படைக்கல்வி வசதியாவது இந்தப் பாராளுமன்ற உறுப்பி னர்கள் செய்யக்கூடாதா?

கல்குடா கல்விப் பிரிவிற்குட்பட்ட இப்பாடசாலைக்கு ஒரு கட்டடம் கூட இல்லை. ஆடு, மாடுகளை வளர்க்கும் கொட்டகைகள் கூட மிகவும் அறுக்கையாகக் காணப்படும். ஆனால் இங்கு காணப்படும் கொட்டகையின் நிலையைப் பார்த்தால்............

கல்குடா வலயக் கல்வித் திணைக்களம் இக்குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டும் பயனளிக்கவில்லை. இப்பாடசாலையில் 150இற்கு மேற்பட்ட மாணவர்களும் 6 ஆசிரியர்களும் உள்ளனர். இவர்களுக்கு இரு கட்டடம் மட்டும் இருந்தால் போதும் என்று எண்ணத்தோன்றுகின்றது. இரண்டு வேண்டாம் ஒரு கட்டிடத்தையாவது சிறப்பான முறையில் அமைத்துக் கொடுக்க இங்குள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் உதவிக்கரம் நீட்ட வேண்டும். தானத்திலே சிறந்த தானம் கல்வி தானம் கல்வியைத் தானம் செய்ய வேண்டாம், குறைந்தது மாணவர்கள் நிம்மதியாக கல்வியைத் தொடர வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசம் என்றால் பார்க்கவா வேண்டும். எதைக் கொண்டு சென்றாலும் கேள்விகளுக்கு மேல் கேள்வி. இந்த அவல நிலை நீங்க வேண்டுமாயின் பாராளுமன்ற பிரதிநிதி, பிரதி அமைச்சர்களின் பார்வை அப்பகுதி மாணவர்களில் விழ வேண்டும்.

இப்பாடசாலை போன்று இன்னும் எத்தனையோ பாடசாலைகள் காணப்படுகின்றன.



மரநிழலில் பாடம் படிக்கிறார்கள்

அதன் குறைகளும் களையப்பட வேண்டும். நகர்ப்புற பாடசாலைக்கு கட்டடம் பெற்றுக் கொடுத்து கட்டடத்தில் பிரதிநிதியின் பெயரை சூட்ட வைப்பது பயனற்றது. இவ்வாறான கஷ்டப் பிரதேச மக்களின், மாணவர்களின் குறைகளை நீக்கினால் அம்மக்களின் மனங்களில் அப்பிரதிநிதியின் பெயர் பொறிக்கப்படும் என்பது திண்ணம்.

ஒரு பாராளுமன்றப் பிரதி நிதி நினைத்தால் அடிப்படைக் கல்வி வசதியற்ற பாடசாலைகளின் குறைகளை நீக்க முடியும் என்பது எனது கருத்து. தேர்தலுக்காக மட்டும் வாக்குறுதியை அள்ளி வீசாது இவ்வாறான குறைகளையும் வீசி எறிய இம்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும்.

எத்தரப்பினராயினும் பாடசாலை மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு மாணவர்கள் மாணவர்களாகத் திகழ வழி சமைக்க வேண்டும். அப்போது தான் தமிழ் பேசும் மக்களிடையே தலை சிறந்த கல்வி மான்களை உருவாக்க முடியும். ❖❖❖❖❖

# சொந்த மண்ணில் நொந்த தமிழினத்தின் வெளிப்பாடே

# பொங்குதமிழ் எழுச்சி அதை தூற்ற வேண்டாம்

பா.அரியநேத்திரன்

கடந்த 15.02.2001ம் திகதி ''கிழக்குப்பல்கலைக்கழகமும் சமாதான எழுச்சியும்'' எனும் பெயரில் 'அன்ரனி' யினால் எழுதப்பட்ட கட்டுரை தொடர்பாக பலரும் பல விதமான ஆதங்கங்களை எழுதியிருந்தனர். இதில் கோ.றுஷாங்கன், இரா. துரைரெத்தினம், பா.வேணுகோபால், பா.அரியநேத்திரனாகிய நானும் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரைகளை வாசித்த பின்பு சம்பந்தப்பட்ட கட்டுரையாளரான 'அன்ரனி' எனும் சு.சீவரெத்தினம் என்பவரின் பதில் கட்டுரைகள் கடந்த பெப்ரவரி 26,27ம் திகதி தினக்கதிரில் முழுமையாக பிரசுரிக்கப்பட்டதை வாசித்திருப்பீர்கள்.

கட்டுரையாளர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 'பொங்கு தமிழ்'' எழுச்சி தொடர்பாக ''வீரகேசரி'', ''சரிநிகர்'' பத்திரிகைகளில் குறிப்பிட்ட விடயங்களை சுட்டிக்காட்டி யாழ் பல்கலைக்கழகத்தில் பொங்கு தமிழ் சுய நிர்ணய உரிமை, யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்பவற்றை கோரிக்கைகளாக வைத்து சமாதானம் பேணப்பட்டதாகவும், ஆனால் கிழக்குப்பல்கலைக்கழகத்தில் சமாதானம் ஒரு கோரிக்கையாக முன் வைத்து பொங்கு தமிழ் இடம் பெற்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் இரண்டு பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டவைகள் தமிழரின் சுயநிர்ணய உரிமை, மரபு வழித்தாயகத்தை வலியுறுத்துவதான நிகழ்வு தானே இதில் என்ன குறிப்பிடத்தக்க வித்தியாசம் இருக்கிறது. நோக்கம் எல்லாம் ஒன்றுதானே.

சுயநிர்ணய உரிமையும், மரபு வழித்தாயகம் என்பதையும் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு அதற்கான இதய சுத்தியுடனான பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளுடன் நடாத்தி ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவது மட்டுமே சமாதானத்திற்கான ஒரு நல்ல முடிவாகும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்தில் எடுக்காமல் இடம்பெறும் சமாதானம் என்பது உப்புச்சப்பு இல்லாத சமாதானமேயாகும். "இதையே நான் வலியுறுத்தியிருந்தேன். இவ்வாறான உப்பு சப்பு இல்லாத சமாதானத்திற்காக மட்டும் கிழக்குப் பல்கலைக்கழக சமூகம் பொங்கு தமிழ் எழுச்சியை செய்யவில்லை என்பதைத்தான் நான் மீண்டும் கூற விரும்புகிறேன்

முஸ்லிம்களை இம்மக்கள் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்ளல் வெற்றிகரமான நடவடிக்கையாகவே அமையும் என கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். யாரும் முஸ்லிம்களை இப்போராடடத்தில் இணைய வேண்டாம் எனக் கூறவில்லையே முஸ்லிம் தலைவர்களில் சிலரும் கிழக்குப் பல்கலைக்கழகச் சமூகத்தின் பொங்கு தமிழுக்கு ஆதரவாகவே குரல் எழுப்பியுள்ளனர். இதை வரவேற்க வேண்டும். அதற்காக முஸ்லிம் மக்களை கிழக்குப்பல்கலைக்கழக சமூகம் அழைத்து வரவேண்டும் என்று எண்ணுவது தப்பு. விரும்பினால் முஸ்லிம்களும் தமது சுயவிருப்புடன் இப்போராட்டத்தில் இணைய வேண்டுமே தவிர அவர்களை கட்டாயப்படுத்தி இணைய வைப்பது என்பது எந்த விதத்திலும் நியாயமாக இருக்க முடியாது.

முஸ்லிம் மக்களும் கிழக்கில் தமிழைத்தான் தாய் மொழியாக கொண்டுள்ளனர். அதற்காக 'பொங்கு தமிழ்' எனும் பெயரை ஏன் மாற்ற வேண்டும்?

தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இன்று சர்வதேச அரங்குகளில் விழிப்பைப் பெற்றிருக்கும் நிலையில் மொத்தத்தில் தமிழர்கள் யாவரும் ஒரு பொதுப்பெயரில் அதாவது ''பொங்கு தமிழ்'' எழுச்சியை பல வடிவங்களில் பல

(4ம் பக்கம் பார்க்க)




## மாவடிப்பள்ளி விளையாட்டுப் போட்டியில் ஹீதா சாம்பியன்!

(முபா)

கடந்த திங்கட்கிழமை மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில் ஹீதா இல்லம் 446 புள்ளிகளைப் பெற்று சாம்பியனானது. இரண்டாமிடத்தை நஜா இல்லம் பெற்று 396 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது. அதிபர் வை. சம்சுதீன் தலைமையில் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் மருதூர் ஏ.மஜீத், காரைதீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.சத்திய தேவா, டாக்டர் ஆபிதா ஏ.கையூம், அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி விரிவுரையாளர் எம்.ஐ.எம் முஸ்தபா ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

இப்போட்டியில் பின்வருவோர் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

11 வயது ஆண்- ஏ.எல்.எம்.சாஜித்
11 வயது பெண்- ஐனுல் சியாமா
13 வயது ஆண்- ஏ.ஆர்.எம்.ரபீக்
13 வயது பெண்- எஸ்.றினோசா
15 வயது ஆண்- எம்.எஸ்.பிர்தௌஸ்
15 வயது பெண்- எப்.தஸ்கியா
17 வயது ஆண்- ஏ.மசூன், ஏ.கே.நௌசாத், எம்.வை.வகாப்
17 வயது பெண்- சற்.றம்சியா
19 வயது ஆண்- ஏ.எம்.அஜ்மீர்
19 வயது பெண்- சற்.றஸ்பா

மாணவிகளின் உடற்பயிற்சிக் கண்காட்சி விஷேட நிகழ்ச்சியாக இடம் பெற்றது.

## அந்தனீஸ் வெற்றி பெற்றது

(வி.கே.ரவிச்சந்திரன்)

மட்/மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தினால் மாவட்ட ரீதியில், 40 வயதுக்கு மேற்பட்டோர் கலந்து கொள்ளும், கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டி கடந்த செவ்வாயன்று நடைபெற்றது.

இப் போட்டியில் சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழகம், சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை 3-0 என்ற வித்தியாசத்தில் வெற்றி கொண்டுள்ளது. சென்.அந்தனீஸ் விளையாட்டுக் கழகம் மேற்படி சுற்றுப்போட்டியில் இதுவரை இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கால் முறிவு; போட்டி பின்போடப்பட்டது!

(வி.கே.ரவீந்திரன்)

களுவாஞ்சிகுடி கல்விக் கோட்ட மட்டத்தில் பெரியகல்லாறு மத்திய கல்லூரிக்கும், களுதாவளை மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான 19 வயதுக் குட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் பெரிய கல்லூறு பொது விளையாட்டரங்கில் நடை பெற்றது. போட்டியின் போது களுதாவளை மகா வித்தியாலய அணியைச் சேர்ந்த கே. நேமிநாதன் என்ற 19 வயது மாணவனுக்கு காலில் முறிவு ஏற்பட்டு, பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். காலில் இரண்டு இடங்களில் முறிவேற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் மேற்படிப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் போட்டிக்கு கூடுதல் பாதுகாப்பு

(நமது நிருபர்)

இலங்கை இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி மார்ச் மாதம் 7ம் திகதி கொழும்பில் நடை பெறவுள்ளது.

இப்போட்டியில் இங்கிலாந்து அணி கலந்து கொள்ளவிருப்பதால் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சுமார் 450 பொலிசார் மைதானத்தில் காவல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(எஸ்.தேவ்ஆனந்)

பட்டிருப்பு வலயக் கல்வித் திணைக்களப் பாடசாலைகளுக்கு, பட்டிருப்பு வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலம் (உடற் கல்வி) சுமார் 40 பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மேற்படி உபகரணங்களில் வலைப்பந்து, கரப்பந்து, பட்மின்டன், கிரிக்கெட் துடுப்பு மட்டைகள், விக்கட்டுக்கள், ரெனிஸ் பந்துகள், கரம் போட், டாம் போட், **Skippring Rope** என்பன வழங்கப்பட்ட உபகரணங்களாகும். இவ்வாறு வழங்கப்பட்ட உபகரணங்கள் மூலம் மாணவர்கள் உடற்கல்விப் பாடவேளையிலும், பின்னேரங்களிலும் பயன்படுத்தக் கூடியதாயுள்ளது. இதுவரை காலமும் ஒரு விதமான விளையாட்டு உபகரணங்களும் கிடைக்கப்பெறாத பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாறான விளையாட்டுப் பொருட்கள் மிகவும் வரப்பிரசாதமாகவுள்ள தென்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் ஏனைய பாடசாலைகளுக்கும் இவ்வாறான விளையாட்டு உபகரணங்கள் வெகுவிரைவில் வழங்கப்படுமென சர்வோதய இணைப்பாளர் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை உபகரணங்களைப் பெற்ற பாடசாலை அதிபர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) அவர்களுக்கும் சர்வோதயத்தினருக்கும் நன்றி கூறினர். இப் பொருட்கள் யாவும் மட்/பட்டிருப்பு ம.ம.வில் வைத்து வழங்கப்பட்ட தென்பது குறிப்பிடத்தக்கதாகும்.



காரைதீவு சன்முகா வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற போது இதில் அதிதியாகக் கலந்து கொண்ட விளையாட்டுத்துறை விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா வீரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: முபா)

## வருடாந்த ஒன்று கூடலும், விருந்துபசார நிகழ்வும்

(கல்முனை மத்திய நிருபர்-ஜெஸ்மி)

மருதமுனையின் முன்னணிக் கழகங்களில் வருடாந்த ஒன்று கூடலும், புதிய நிர்வாகக் கழகத்தின் விழாவும் இராப்போசன விருந்துடன் 02.03.2001 வெள்ளி பி.ப.6 மணிக்கு ஹுங்லன்ட் ரெஸ்ட்ரூரன்ஸில் நடைபெறவுள்ளது.

கழக முகாமையாளர் ஸெஸ்மி.எம்.மூஸா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்விற்கு கிளியர் செக்குரிட்டி சேர்விஸ் முகாமையாளர் இஸட்.ஏ.எச்.றஹ்மான் பிரதம அதிதியாகவும் கழகத்தின் ஆலோசகரும், ஆசிரியருமான பைலுல் றஹ்மான் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். விழாவின் முடிவில் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவுள்ளது.

# வாசகர் நெஞ்சம்

## நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்

அகில இலங்கை அரசாங்க பொது உழியர் சங்கத்தின் மட்டுமாவட்ட இணைப்பாளராகிய எனக்குக் கல்வித் திணைக்களத்தில் பல வருடங்களாக அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் பலதரப்பட்ட ஊழியர்களாலும் நிரந்தரமாக்குவது சம்பந்தமான புகார் கிடைக்கப் பெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் அண்மையில் பொது நிருவாக அமைச்சின் சுற்றறிக்கை இல 26/99க்கு இணங்கி நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியும் இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. ஆனால் ஏனைய மாவட்டங்களிலும் அதே வேளை எமது மட்டுமாவட்டத்திலும் சில அரசியல்வாதிகளின் தலையீட்டால் அனேகமானோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக என்னிடம் புகார் கிடைத்ததைத் தொடர்ந்து எங்கள் சங்கம் இவ்விடயத்தை கல்வி அமைச்சு மற்றும் வடகிழக்கு புனர்வாழ்வு அமைச்சுப் போன்றவற்றிற்கு அண்மையில் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சு இவ்விடயம் சம்பந்தமாக கவனம் எடுக்கத் தவறும் பட்சத்தில் எமது மட்டு மாவட்ட அகில இலங்கை பொது ஊழியர் சங்கக் கிளை தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

**கே.சண்முகநாதன்**
**அ.இ.அ.பொது ஊழியர் சங்கம்**

## இலங்கை நிர்வாக சபை ஆட்சேர்ப்பு!

இலங்கை நிர்வாக சேவைக்கு வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு என தனியான ஆட்சேர்ப்பை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதற்கென வட கிழக்கில் உள்ள பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் விரைவில் கோரப்படவுள்ளதாகத் தெரிகின்றது. ஆனால் இதற்கான வயது வரம்பு 28 வயதுக்குக் கீழ் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வடக்குக் கிழக்கில் ஏற்பட்டுள்ள சூழ் நிலை காரணமாக இப்பிரதேசப் பட்டதாரிகள் எவரும் 28 வயதுக்கு முன்னர் பட்டம் பெறுவது மிகவும் சிரமம். இவ்வாறு 28 வயதிற்கு முன் பெற்றவர் தொகை மிகக் குறைவு. எனவே, சகல பட்டதாரிகளும் நன்மை பெறும் வகையில் இவ்வயது எல்லை அதிகரிக்கப்படல் வேண்டும்.

**ஆ.சிறி**
**மட்டக்களப்பு**

## சோதனைச் சாவடி திறப்பதில் தாமதம்! இதனால் வேலைகளும் தாமதம்!

களுவாஞ்சிகுடி பட்டிருப்புப் பால சோதனைச் சாவடியினைக் காலையில் திறந்து பொது மக்களின் போக்குவரத்திற்கு பொலிஸார் உதவிட வேண்டும் எனப் படுவான்கரை மக்கள் வேண்டி நிற்கின்றார்கள்.

பட்டிருப்புப் பால சோதனைச் சாவடி மூலமே படுவான்கரை பொது மக்கள் களுவாஞ்சிகுடி ஊடாக இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்வதற்கான வழியாகும். இந்தச் சோதனைச் சாவடி காலை ஏழு மணிக்குப் பின்பே திறந்து விடப்படுவதால் களுவாஞ்சிகுடி நகரிற்குள் வருகின்ற மக்கள் பொலிஸ் சோதனைகளை முடித்துவரும் போது எட்டு மணியாகி விடுகின்றது. இதனால் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பதற்காக வருகின்ற மாணவர்கள் பாடசாலைக்கு நேரம் பிந்தியே வருகின்றார்கள். அத்தோடு மட்டுநகர் போன்ற இடங்களுக்கு நேரத்துடன் செல்ல முடியாதுள்ளது. இதைவிட கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் கூட குறித்த நேரத்தைவிட தாமதித்தே பயணத்தைத் தொடர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

நியூ ஈஸ்ரன் பஸ் கொம்பனி லிமிட்டட்டின் உப டிப்போ களுவாஞ்சிகுடியில் நிறுவப்பட்டுள்ளது. இதிலிருந்து காலை 7.30க்கு கொழும்புக்குப் புறப்பட உள்ள பஸ் தற்போது 8.30 அளவிலே புறப்பட வேண்டியுள்ளது. தூர இடங்களில் தொழில் புரியும் அரச ஊழியர்கள் தங்கள் கடமைகளுக்கு காலம் தாழ்த்தியே செல்ல வேண்டியுள்ளது. இவற்றைக் கருத்திற் கொண்டு பொலிஸ் உயர் அதிகாரிகள் பட்டிருப்புப் பால சோதனைச் சாவடியை காலை 6.00 மணிக்காவது திறந்துவிடுவதற்கு ஆவனை செய்ய வேண்டும்.

**எழுவான்**
**களுவாஞ்சிக்குடி**

## ஆரையம்பதி மக்களை கடல் கொண்டு போகா வண்ணம் காப்பாற்றுங்கள்......!

ஆரையம்பதி கடற்கரையில் மண் அகழ்வு நீண்ட நாட்களாக தங்கு தடையின்றித் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதனால் கடற்கரை நீளத்துக்கும் பெரிய கிடங்குகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு கிடங்கும் ஆரையம்பதி மக்களை மிக விரைவாக விழுங்கி ஏப்பம் விடப்போகின்றேன் பார் என அச்சுறுத்துவது போல் இருக்கிறது.

இம் மண் அகழ்வை மேற்கொள்வோர் கூட அவ்வூரைச் சேர்ந்தவர்களே. அவர்கள் மண்ணை அகழ்ந்தெடுத்து வேறு ஊர்களுக்கு விற்பனை செய்கின்றனர். இவர்களிடம் யாரும் இதுபற்றிக் கேட்பதே இல்லை.

எனவே, தயவு செய்து மண் அகழ்வை நிறுத்தி, ஆரையம்பதி மக்களை கடல் கொண்டு போகாது தடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கிறேன்.

**த.ராமன்**
**கடற்கரை வீதி**
**ஆரையம்பதி.**

# பேச்சிலிருந்து போருக்கு இழுக்கும்

## அரசின் தந்திரத்தை முறியடித்து முன்னேற வழி தேடுவோம்

(நமது நிருபர்)

கடந்த 1929 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழு வாயிலாக சேர். பொன்னம்பலம் அவர்கள் கண்ட அந்தத் தோல்வி உணர்வையும் 1947 ஆம் ஆண்டு சோல்பரி ஆணைக்குழு வாயிலாக அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்கள் கோரிய சமவுரிமைக்கு பிரித்தானியர் தமிழினத்திற்குத் தந்த பரிசினையும் கண்டு அன்று அவர்கள் என்ன உணர்வைக் கொண்டிருப்பார்கள் என்பதை நாம் பிரித்தானியா புலிகளைத் தடை செய்துள்ள இந்த நிமிடத்தில் எண்ணிப் பார்க்க முடிகின்றது. என அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் நகுமாரகுருபரன் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பத்து தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து புலிகளைப் பிரித்தானியா தடை செய்யக்கூடாது மற்றும் அரசாங்கம் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வெளிநாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து கோரிக்கை விடுத்து வந்தன.

அதில் அங்கம் வகிக்கும் கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்: புலிகளைப் பிரித்தானியா தடை செய்வதானது பிரித்தானியாவுக்கும் புலிகளுக்குமிடையில் உள்ள ஏற்பாடுகள், புரிந்துணர்வுகளுக்கு அப்பாற்பட்டதே. ஆனால் இலங்கையிலுள்ள இனப்பிரச்சினைக்கு, தமிழினத்தின் உரிமைப் போராட்டத்திற்குத் தமிழீழ விடுதலைப்புலிகளே முக்கிய பங்காளிகள் என்கின்ற நிலையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படவில்லை.

### முக்கிய பங்காளிகள் விடுதலைப்புலிகளே

அந்த வகையில் இலங்கையில் ஒரு நிரந்தரச் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் அமெரிக்காவோ, பிரித்தானியாவோ, இந்தியாவோ புலிகளைத் தடை செய்தாலும் இலங்கை அரசு பேச்சு வார்த்தை மூலமாக இருந்தாலென்ன இராணுவத் தீர்வு வாயிலாக இருந்தாலென்ன இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலுமானால் அதன் முக்கிய பங்காளிகள் தமிழீழ விடுதலைப்புலிகளே என்னும் நிலையில் எந்தவொரு மாற்றமும் இருப்பதாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் நம்பவில்லை.

எமது கட்சியைப் பொறுத்த வரையில் மட்டுமல்ல எங்களுடன் இணைந்து குரல் கொடுத்த ஏனைய பத்து தமிழ் கட்சிகளையும் பொறுத்த வரையிலும் கூட இது ஒரு ஏமாற்றமாகவே உள்ளது. இருந்தாலும் அண்மையில் இலங்கை விஜயம் செய்திருந்த ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகளும் இலங்கையில் உள்ள பிரித்தானிய தூதுவராலயத்தின் அதிகாரிகளும் இத்தடையானது எந்த வகையிலும் நோர்வேயின் இதயசுத்தியான பேச்சு வார்த்தைக்குரிய நடவடிக்கைகளைப் பாதிக்காது என்று திட்டவட்டமாக எமக்குக் கூறியிருக்கின்றார்கள்.

எங்களைப் பொறுத்த வரையில் அமைதி பிறக்க வேண்டும். அந்த வகையில் இத்தடையினால் ஏற்படப்போகின்ற பலாபலன்களைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்" என்றார்.

### கபடத்தை முறியடிக்க அவதானமாக வேண்டும்

ஈ.பி.ஆர்.எல்.எவ்

கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிறேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்: பிரிட்டன் புலிகளை மட்டுமின்றி 21 இயக்கங்களைத் தடை செய்துள்ளது. எனினும் இத்தடை தொடர்பான பிரேரணை பிரித்தானியப் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு விவாதத்தின் பின்பே முடிவுக்கு வரும்.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் இராஜதந்திரமாகச் செயற்பட வேண்டிய காலகட்டமிது. ஏனென்றால் இலங்கை அரசாங்கம் புலிகளை ஒரு பயங்கரவாதிகளாகக் காட்டி அவர்களை இந்த பேச்சு வார்த்தையில் இருந்து போருக்கு இழுக்கக்கூடிய ஒரு கபடத்தனமான நோக்கத்தையும் கொண்டிருக்கலாம்.

இவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால் தமிழ் சமூகம் மீண்டும் ஒரு நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்படுவதற்கான ஒரு வாய்ப்பாகவே அமையும். இதிலிருந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றெடுப்பது என்று கூறிய அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் செயற்பாடுகள் இருக்க வேண்டும்.

அரசாங்கம் வலிந்து விடுதலைப்புலிகளைப் போருக்கு இழுக்குமென்ற நிலையிலிருந்து புலிகள் அவதானமாக இருக்க வேண்டும்" என்றார்.

ரெலோ கட்சியின் முதல்வரும் சட்டத்தரணியுமான என். சிறிகாந்தா கருத்துத் தெரிவிக்கையில்: தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது பிரித்தானிய அரசாங்கம் விதித்துள்ள தடை எமக்கெல்லாம் ஏமாற்றம் அளித்துள்ளது என்பதனைச் சொல்லித்தான் ஆக வேண்டும். இருந்தபோதிலும் இதனால் தமிழினத்தைப் பொறுத்த மட்டில் எதுவுமே குடிமுழுகிப் போய்விடாது.

### விடுதலை எழுச்சியை மழுங்கடிக்கக் கூடாது

தமிழினத்தின் தேசிய விடுதலை எழுச்சியைத் திட்டமிட்டு மழுங்கடிக்காமல் பார்த்துக் கொள்வது எம்மனைவரினதும் கடமையாகும். இந்த விடயத்தில் சுயமரியாதை உள்ள தமிழ் மக்கள் அனைவரும் உறுதியாக நிற்பார்களேயானால் விடுதலைப் பாதையில் போடப்படும் தடைகள் காலப்போக்கில் தகர்ந்துபோவது தவிர்க்கப்பட முடியாதது ஆகிவிடும்.

பிரித்தானிய பாராளுமன்றம் இந்த விடயத்தில் சரியான நேரத்தில் உரிய முடிவுகளை எடுக்கும் என்கிற எதிர்பார்ப்பு இப்போதும் எங்களுக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடை பிரித்தானிய நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் பின்பே சட்டமாகும். அப்போது இந்த விடயத்தில் தமிழினத்தின் உணர்வுகளை மதித்துச் செயற்படுமாறு பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கோர வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளைச் சார்ந்திருக்கின்றது. இதை நாங்கள் எதிர்காலத்தில் நிச்சயமாகச் செய்வோம் என்றார்.

# தடை நடவடிக்கை சமாதான முயற்சியை பாதிக்கும்

## செல்வராசா எம்.பி.

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக செய்துள்ள போர் நிறுத்தத்திற்கு அரசு செவிமடுக்காது பிரித்தானியாவை தன்வசப்படுத்தி விடுதலைப் புலிகளை தடை செய்ய முயற்சிக்கிறது. இந்த நடவடிக்கையானது பின்னடைவுக்கு உட்படுத்தப்படும் செயல் என நாம் கருதுகிறோம்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்தார்.

செங்கலடி மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற சிறுவர்களுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி மற்றும் விளையாட்டு அரங்கு திறப்பு விழா ஆகிய வற்றில் கலந்து சிறப்பித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்

### அழிப்பில் எப்படி அபிவிருத்திவரும்

கடந்த 90ஆம் ஆண்டுக்கு முன் மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டிலும் அபிவிருத்தி அடைந்து காணப்பட்டது. ஆனால் கடந்தகால வன்செயல் காரணமாக பின்னடைவு ஏற்பட்டுள்ளது. கடந்த தேர்தல் காலத்தில் சாவகச்சேரிப் பிரதேசம் படையினரால் குண்டு போட்டு அழிக்கப்பட்டன இப்படியான நிகழ்வுகள் நடைபெறும் போது அபிவிருத்திகள் என்பதை சிந்திக்க முடியாத நிலையே தோன்றியுள்ளது.

இவற்றிக்கு காரணமான போரை தொடர விட்டால் எமது நிலைமை மோசமாகும் எனவே தமிழ் சமூகம் அனைத்தும் போரை நிறுத்துவதற்கான வழிமுறையை பின்பற்ற வேண்டும்.

இன்று விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் செய்துள்ள போதும் அதற்கு அரசு செவிமடுக்காமல் பிரித்தானியாவைதன்வசப்படுத்தி விடுதலைப்புலிகளை தடை செய்ய வலியுறுத்துகிறது.

விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்டுள்ள நிலைமையானது வடக்கு கிழக்கு மட்டுமல்ல அனைத்து தமிழ் மக்களுக்கும் வேதனையைக் கொடுக்கும் ஒரு செயலாகும் எனத் தெரிவித்தார்.

இவ்விழாவில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.குனராஜரெட்ணம், கல்குடா வலய கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம்.ஜெயனுதீன், ஏறாவூர் பற்று கோட்டக் கல்வி அதிகாரி இ.வேலுப்பிள்ளை, கல்குடா கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எச்.எம்.முகைதீன் உட்பட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், கலந்து சிறப்பித்தனர்.


**~ஹஜ் சிறப்பிதழ்~**

எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உங்கள் தினக்கதிர் ஒரு சிறப்பிதழ் வெளியிடவுள்ளது. இதில் ஹஜ் தொடர்பான உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அத்தோடு ஹஜ் வாழ்த்துச் செய்திகளை உங்கள் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்க உடன் தொடர்பு கொள்ளுங்கள்


# கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் இலவச வகுப்புக்கள்

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியை கருத்தில் கொண்டு ஆண்டு 5,க.பொ.த.(சாதாரண) உயர்தரம் மாணவர்களுக்கான இலவச வகுப்புகள் இடம் பெறவுள்ளது.

மட்டக்களப்பு கல்வி அபிவிருத்திச் சங்கம் கடந்த ஒன்பது வருடங்களாக தொடர்ந்து இப்பணியை மேற்கொண்டு வருகின்றது.

இவ் வருடத்திற்கான இலவச வகுப்புகள் இம் மாதம் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்/விவேகானந்தா மகளீர் வித்தியாலயத்தில் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மானந்தஜீ மகராஜ் அவர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது. என கல்வி அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ச.சந்திரகுமார் தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

# விடுதலைப் புலிகளின் தடுப்பு காவலில் இருந்து இருவர் விடுதலை!

(வவுனியா நிருபர்)

விடுதலைப் புலிகளின் தடுப்பு காவலில் இருந்து இரு சிங்களவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 1ம் திகதி வவுனியா மாமடுப்பகுதியில் குளத்தில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது காணாமல் போனவர்கள் எனக் கூறப்பட்ட வி.வி.சந்தரபால,எச்.எம்.அஜித்குமாரசிறி ஆகிய இருவருமே அனைத்துலக செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு நேற்று வவுனியா கண்டி வீதியில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

# ஏறாவூர் தமிழ் பிரிவுக்கு பஸ்தரிப்பு நிலையம்

(அரியம்)

ஏறாவூர் 5ம் குறிச்சியில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்று நேற்று திறக்கப்பட்டுள்ளது. வாழைச்சேனை ஈஸ்டன் பஸ் கம்பனி சீரலையின் அனுசரணையுடன் திறக்கப்பட்டுள்ள இப் பஸ் தரிப்பு நிலையத்தில் கொழும்பு, பொலனறுவை, வவுனியா, மன்னார், ஆகிய தூர இடங்களுக்கான பஸ் சேவையும் உறுகாமம், உன்னிச்சை, கரடியனாறு, மட்டக்களப்பு, வாழைச்சேனை ஆகிய பகுதிகளுக்கானதுறும் தூரசேவை பஸ் போக்குவரத்துக்களும் இடம் பெறவுள்ளது.

# "இலக்கிய இன்பம் நூல் அறிமுக நிகழ்வு"

(மருதமுனை நிருபர்)

ஆராய்ச்சி அறிஞர் மர்ஹூம் ஜே.எம்.எம்.அப்துல் காதிரின் இலக்கிய இன்பம் கட்டுரைத் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு நாளை காலை 8.30 மணிக்கு மருதமுனை அல்.மனார் மத்திய கல்லூரி மண்டபத்தில் அதிபர் ஏ.எல்.மீராமு கைதீன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூத்த துணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அல்.ஹாஜ் ஹனிபா(மருதூர்க்கனி).கௌரவ அதிதியாக கல்முனை பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அல்.ஹாஜ்.எஸ் நஜிமுதீன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

**'பிரிட்டிஷ்......**

முன் வைக்கும் மனுவை பாசீலனை செய்து சாதகமாக அமையும் பட்சத்தில் தடையினை நீக்க முடியும் அதற்கு சாதகமான தீர்ப்பு கிடைக்காவிட்டால் இதுக்கென நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழு (P.O.A.L.)வில் மேன்முறை செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.